பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 14 வெள்ளிக்கிழமை 29.11.2024 கதிர் 022



## பாதுகாப்பு அமைச்சு செயலர் வடமராட்சியில் கள ஆய்வு

### வெள்ளப் பாதிப்புக்களை நேரில் பார்த்தார்

சீரற்ற காலநிலை காரணமாக வடமராட்சி பகுதியில் அதிக பாதிப்புக்கு உள்ளான புனிதநகர்ப் பகுதிக்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நேற்று திடீரென நேரில் சென்று கள நிலவரம் தொடர்பில் ஆராய்ந்தார்.

சீரற்ற காலநிலை காரணமாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புனித நகர்ப் பகுதி வெள்ளத்தால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருந்த கற்கோவளம் மெதடிஷ்த மிஷன் அ.த.க.பாடசாலைக்கு திடீர் ☞ 2

## வடிகாலமைப்பின் சீரின்மையே வெள்ள இடர் ஏற்படக்காரணம்

### வன்னி எம்.பி. ரவிகரன் சுட்டிக்காட்டு



வடிகாலமைப்பு சீரின்மையாலேயே அதிகளவான இடங்களில் மழை நீர் தேங்கி பெரும் அளவில் வெள்ள இடர் ஏற்படக் காரணம் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடர் நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக இடம்பெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உரிய திணைக்களங்கள் வடிகாலமைப்பு விடயத்தில் அதிக கவனத்துடன் செயற்படவேண்டும் என்பதுடன் வெள்ள இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்குதல், நிவாரணங்கள் வழங்குதலுடன், தறப்பாள் வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

## இது ரகசியம் அல்ல!

வெளியிலிருந்து வந்த கடும் அழுத்தங்களைத் தொடர்ந்து ரெலோ அமைப்புக்குள் கிளர்ச்சியாளர்களின் கோரிக்கையை தலைமை ஒருவாறு ஏற்றுக்கொண்டுள்ளது. அவர்கள் கேட்டதைப் போன்றே மத்திய குழுவின் கூட்டத்தை நாளை 30ஆம் திகதி கூட்டுவதாக அறிவித்துள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் தேர்தலில் ரெலோ அடைந்த படுதோல்வி குறித்து காரசாரமான விவாதங்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தலைமைக்கு எதிராகக் குரல்கொடுத்து தலைமையைக் கேள்வி கேட்டவர்களை கட்சியைவிட்டுத் தூக்குவதற்கு முயற்சித்தால் அது கூட்டத்தில் தலைமைக்கு எதிரான விளைவுகளுக்குக்கூட வழிவகுக்கலாம் என்கிறார்கள். பார்க்கலாம் என்ன நடக்கிறது என்று.

.............................................

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு முன்னாள் ஜனாதிபதியின் சலுகைகள், வசதிகளை வெவட்டிக் குறைப்பதில் கவனம் செலுத்தியை அடுத்து, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நிறுத்துவது குறித்தும் கவனம் ☞ 2

## வெள்ள இடர்பாடுகளினால் சுமார் 4 லட்சம் பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 24 மாவட்டங்களிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அனர்த்தங்களில் சிக்கி இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மழை, வெள்ளம் போன்ற அனர்த்தங்களால் ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 52 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 77 ஆயிரத்து 511 பேர் ☞ 8

# நினைவேந்தலுக்கான அனுமதி எதிர்பார்ப்பை வலுப்படுத்துகிறது

### மாற்றுக்கொள்கைகளுக்கான அமைப்பு வரவேற்பு

புதிய ஆளும்தரப்பு நினைவேந்தலிற்கான உரிமைக்கு இடமளித்திருப்பது நல்லிணக்கச் செயற்பாட்டின் எதிர்காலம் குறித்து சமூகங்களுக்கிடையிலான எதிர்பார்ப்புக்களைவலுவடையச்செய்துள்ளது என மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் தெரிவித்துள்ளது. அது மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கைகடந்ததசாப்தங்களில்பல்வேறு சமூகங்கள் தங்கள் அன்புக்குரியவர்களை இழக்க வழிவகுத்த மோதல்களைச் சந்தித்துள்ளது. இருப்பினும், தங்களது அன்புக்குரியவர்களை நினைவுகூரும் உரிமையானதுபலருக்கும்மறுக்கப்பட்டுள்ளது.

அர்த்தமுள்ள நல்லிணக்கச் செயல்முறைகளை நினைவுகூரும் உரிமைக்கான உத்தரவாதம் அவசியமானதாகும். தற்போதைய புதிய ஆளும்தரப்பு அவ்வாறான நினைவேந்தலுக்கான உரிமைக்கு இடமளித்திருப்பதானது ☞ 2

## உள்நாட்டு உற்பத்தி 5 வீதமாக வளரும்

### மத்தியவங்கி ஆளுநர் எதிர்வுகூறல்

மொத்த உள்நாட்டு உற்பத்தி இந்த வருடத்தில் 5 வீதமாக வளர்ச்சியடையும் என எதிர்பார்ப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி இந்த வருடத்தில் 4.5 வீதம் முதல் 5 வீதம் வரை வளர்ச்சியடையலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பலரும் ☞ 2

## இன்று மாலை வரை மண்சரிவு எச்சரிக்கை

நாட்டில்ஏற்பட்டுள்ளசீரற்றகாலநிலை காரணமாக 9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை இன்று மாலை 4.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கண்டி, கேகாலை, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களின்சிலபகுதிகளுக்குசிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ☞ 2

## இளைஞர்களிடையே எய்ட்ஸ் தொற்றுப் பரவல் அதிகரிப்பு

கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் மூலம் கூட்டாளர்களைக் கண்டறிதல் மற்றும் முறையான பாலியல் கல்வி இல்லாதது போன்ற காரணங்களால் இளைஞர்களிடையே எச்ஐவி தொற்று அதிகரித்துள்ளதாக தேசிய பாலியல்நோய்கள்மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் பதிவான எச்.ஐ.வி தொற்றுக்களில் 15 சதவீதம் பேர் 15முதல்24வயதுக்குட்பட்ட இளைஞர்கள் என ☞ 2

## பண மோசடி என்பது பொய்க் குற்றச்சாட்டு

### மனுஷ நாணயக்கார அறிவிப்பு

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக பணம் பெற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை. ☞ 2

## விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தை ஆளும்தரப்பு எப்படி அனுமதிக்கலாம்?

### பொது ஜன பெரமுன சீற்றம்

வரையறைகளுடன் மாவீரர் தினத்தை எப்படி அனுமதிக்க முடியும் என்று ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் உறுப்பினர் மனோஜ் கமகே தெரிவித்தார்.

கட்சிக் காரியாலயத்தில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரலாற்றில் என்றுமில்லாத வகையில்மாவீரர்தினம்இம்முறை வடக்கில் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுபாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் மாவீரர் தினத்தை அனுஸ்டிப்பதற்கு அனுமதியளித்துள்ளதாக ஆளும்தரப்பு குறிப்பிடுகிறது. ஆனால்வடக்கு மக்கள் இம்முறை போராளிகளையும் விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனையும் பகிரங்கமாக நினைவு கூர்ந்துள்ளனர்.

விடுதலை புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பாக அறிவித்து தடை செய்யப்பட்டுள்ளது. உலகில் 32 நாடுகளில் இந்த அமைப்பு தடை செய்யப்பட்டுள்ளது. தடைசெய்யப்பட்ட பயங்கரவாதஅமைப்பைஎவ்வாறு வரையறைகளுடன்அனுஸ்டிக்க இடமளிக்க முடியும்? இவ்வாறான செயற்பாடுகளினால் ☞ 2

## மாணவர்களின் இறப்பு பற்றி மத்ரஸா நிர்வாகம் விளக்கம்

அம்பாறை மாவட்டத்திலுள்ள மாவடிப்பள்ளியில் வெள்ளத்தில் அகப்பட்டு 8 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக நிந்தவூர் காசிபுல் உலூம் அரபுக் கல்லூரி நிர்வாகம்விளக்கம்அளித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவில்இருந்துசம்மாந்துறை நோக்கிச் செல்லும் பிரதான பாதையில் அமைந்துள்ள மாவடிப்பள்ளியில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று ☞ 2

## இனி இது .....

செலுத்தி வருகின்றது என்று தெரிகின்றது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சலுகைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய இந்த நடவடிக்கைக்குத் திட்டமிடப்படுவதாகத் தெரிகின்றது.

ஏற்கனவே ஆளும் தரப்பின் நடவடிக்கைகளை எதிர்த்து முன்னாள் ஜனாதிபதிகள் எல்லோரும் இணைந்து சங்கம் அமைத்திருக்கும் நிலையில் இனி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கமும்விரைவில்உருவாகலாம்போல்தான் இருக்கின்றது.

..............................

தேசிய மக்கள் சக்திக்கும் வாகனங்களுக்குமான உறவு பற்றி நேற்று இந்தப்பத்தியில்தெரிவித்திருந்தேன். அதன்படி அமைச்சர்களுக்கு புதிய வாகனங்களைக் கொடுப்பது மட்டுமல்ல, அதி சொகுசு வாகனங்களைக் கொடுப்பதில்லை என்றும் அதிக எரிபொருள் பயன்பாடுடைய அதி சொகுசு வாகனங்களை விற்று அதில் வரும் பணத்தைக் கொண்டு எரிபொருள் சிக்கனமான சிறிய வாகனங்களை வாங்கி அமைச்சர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்குவது என்றும் ஆளும் தரப்புத் தீர்மானித்துள்ளது.

அதன்முதற்கட்டமமாகஅமைச்சுக்களுக்குச் சொந்தமாகஇருந்த150சொகுசுவாகனங்களை ஏலத்தில்விடுவதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முக்கியமாக வி-8 மற்றும் மொண்டிரோ போன்ற வாகனங்களை விற்றுவிடுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

வடக்கு மாகாண சபை அமைந்தபோது அதன்முதலமைச்சர்மற்றும்அமைச்சர்களுக்கு எனவாங்கப்பட்ட'பறக்கும்படை'வாகனங்கள் போன்றவற்றைத்தான் அதி சொகுசு வாகனங்கள் என்று இப்போது ஆளும் தரப்பு விற்க முற்படுகின்றது. நல்லவேளை முதலமைச்சராக விக்னேஸ்வரன் இப்போது இல்லை. அமைச்சுக்களின் இந்த வகை வாகனங்களை விற்கலாம். ஆனால் அரச அதிகாரிகள் பலரும் இதேவகை வாகனங்களைத்தனர் பயன்படுத்துகிறார்கள். குறிப்பாக அமைச்சுக்கள் மாகாகண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்டச் செயலர்கள், தலைமைச் செயலர்கள் போன்றவர்களும் இதேபோன்ற அதி சொகுசு வாகனங்களைத்தான் பயன்படுத்துகிறார்கள். அப்படியானால் அடுத்த ஆப்பு அவர்களுக்குத்தானோ....

.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நினைவேந்தலுக்கான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லிணக்கச் செயற்பாட்டின் எதிர்காலம் குறித்து சமூகங்களுக்கு இடையிலான எதிர் பார்ப்புக்களை வலுவடையச் செய்துள்ளது.

## பண மோசடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதுதொடர்பில் முழுமையான விசாரணை மேற்கொள்ளவேண்டும்எனதொழில்மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித்த ஹேரத்துக்கு அவர் அனுப்பியுள்ளகடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஈ-8 விசா குழுவின் கீழ் பருவகால தொழில் வாய்ப்புக்களை நாட்டுக்கு பெற்றுக்கொள்வதற்காக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்றவகையில் இலங்கை மற்றும் கொரிய குடியரசில் செயற்படுத்தப்படும் சட்ட நிலைமைகளை சம்பந்தப்படுத்திக்கொண்டு சட்ட ரீதியாகவும் வெளிப்படைத்தன்மையுடனுமே நடவடிக்கை எடுத்தேன்.

200 மில்லியன் டொலர்களாக இருந்த நாட்டின்மாதாந்தவெளிநாட்டுசெலாவணியை 500மில்லியன்டொலர்வரைஅதிகரிப்பதற்கு முன்னெடுத்த நடவடிக்கையின்போது இருதரப்பு ஒப்பந்தத்தின் ஊடாக கொரிய தொழிலுக்காக தொழிலாளர்களை அனுப்புவதை அதிகரித்துக்கொள்வதற்கு கொரியாவில் பருவகால தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தேன்.

அதேநேரம் இதுவரை எமது நாட்டுக்கு திறக்கப்படாமல் இருந்த பல தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள எங்களுக்கு முடியுமாகி இருந்தது.இரு தரப்பு உடன்படிக்கைக்கு அமைய கொரியாவில் கப்பல் நிர்மாணத்துறையில் எமக்கு தொழில் வாய்ப்பு கிடைத்தது. அதேபோன்று தற்போது சர்ச்சைக்குள்ளாகி இருக்கின்ற கொரியாவில் விவசாயத்துறையில் பருவகால தொழில் வாய்ப்புகளை (ஈ-8 குழுவின் கீழ் விசாவுடன் தொழில்) திறந்துகொள்வதற்கு அதன் பிரகாரமே நடவடிக்கை எடுத்திருந்தோம்.

என்றாலும் கடந்த ஒன்றை வருடமாக வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களுக்காக நான் பணம் பெற்றுக்கொண்டே அனுப்பியதாக எனக்கு எதிராக தொடர்ந்து சமூகவலைத்தலங்கள் மற்றும் பல்வேறு ஊடகங்கள் வழியாக குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டு வருகிறது. இந்த குற்றச்சாட்டு எனது தனிப்பட்ட வாழ்க்கைக்கும் அரசியல் வாழ்க்கைக்கும் பாதிப்பாகும். இந்த குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரிக்கிறேன்.

எனவே வெளிநாட்டுக்கு தொழிலுக்கு அனுப்பும் நடவடிக்கையில் பணம் பெற்றுக்கொண்டுஅவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி இருந்தால் அது பாரிய குற்றமாகும். அவர்கள் தொடர்பில் தராதரம் பார்க்காமல் சட்டத்தை நிலைநாட்ட வேண்டும். அதற்கு தேவையானநடவடிக்கைமற்றும்முறையான விசாரணையைவிரைவாகமேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம்மேற்கொண்டபாதுகாப்புஅமைச்சின் செயலாளர் சம்பத் துய்யகொண்டா வெள்ள நிலைமை தொடர்பில் ஆராய்ந்ததுடன் அப்பகுதி மக்களுடனும் கலந்துரையாடினார்.

வெள்ளத்தால்பாதிக்கப்பட்டபகுதிகளையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன்போதுஇப்பகுதியில்ஏற்பட்டஇடர்பாடு தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்குத் தான் கொண்டுசெல்வதாகப் பொதுமக்களிடம் உறுதியளித்துள்ளார்.

## விடுதலைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலத்தில் ஒசாமா பின் லேடனையும் இலங்கையில் அனுஷ்டிக்க நேரிடும்.

தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். தமிழ் மக்களின் ஆணையை ஆளும்தரப்புச் சிறந்த முறையில் பயன்படுத்தவேண்டும்.

நாட்டைப் பிளவுப்படுத்தும் நோக்கம் நாட்டுப் பற்றுள்ள இலங்கையர்களுக்கு கிடையாது. இலங்கையில் வாழும் தமிழர்கள் இலங்கையர்கள் என்ற அபிமானத்துடன் வாழ்வதற்கே விரும்புகிறார்கள். பிரிவினைவாதக் கொள்கையுடைய தமிழ் அரசியல்வாதிகளே நாட்டை பிளவுப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றி அக்காணிகளை உரியவர்களுக்கு வழங்குவதற்குஆளும்தரப்புநடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அத்துடன் எதிர்வரும் மாதமளவில் பெருமளவான இராணுவ முகாமைகளை வடக்கில் இருந்து அகற்றுவதிலும் ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்தியுள்ளது.

வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றி, காணிகளைப் பகிர்ந்தளித்தல் தொடர்பில் பாதுகாப்பு தரப்புடன் விரிவான பேச்சுக்களில்ஈடுபட்டு உரிய மீளாய்வுகளுக்கு பின்னர் பொறுப்புடன் தீர்மானங்களை எடுக்கவேண்டும். இச்செயற்பாடுகளினால் தேசிய பாதுகாப்பு சிறிதளவேனும் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பது எமது நிலைப்பாடாகும்.

இலங்கையில் 30 ஆண்டுகள் நீடித்த பயங்கரவாத போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அனைத்து இன மக்களும் இன்று சுதந்திரமாக வாழ்கிறார்கள். வடக்கிலும், கிழக்கிலும் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இருத்தல் வேண்டும் என்பதை ஆளும்தரப்பும் அரச தலைவர்களும் மறக்கக்கூடாது என்றார்.

## இளைஞர்களிடையே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த திட்டத்தின் இயக்குநர், சமூக சுகாதார நிபுணர் வைத்தியர் விந்தியா குமரிபெலி தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்றஊடகவியலாளர்சந்திப்பில்கலந்து ண்ட போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

கடந்த ஆண்டு, எச்.வி.ஐ வைரஸால் பாதிக்கப்பட்ட 694 புதிய நோயாளிகள் நம் நாட்டில் பதிவாகியுள்ளனர்.

தரவுகளைப் பார்க்கும்போது, புதிதாக எச்.ஐ.வி. வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவது தெளிவாகிறது.

குறிப்பாகஇளைஞர்களிடையேகிடைக்கும் தரவுகளைப் பார்க்கும்போது, புதிய நோயாளிகள் 15சதவீதம் பேர் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களாகும்.

இதைமேலும்ஆராயும்போதுசெல்போன் உள்ளிட்டபல்வேறுநவீனதொழில்நுட்பங்கள் மூலம் புதிய உறவுமுறை கூட்டாளர்களை கண்டுபிடிப்பதே இதற்குக் காரணம் என்று தெரிகிறது.

அல்லது சரியான பாலியல் கல்வி பெறவில்லை. சில மருந்துகளுக்கு அடிமை யாதல் போன்ற விடயங்கள் இளைஞர் களிடையே புதிய தொற்றுநோய்களின் அதிகரிப்புக்கு வழிவகுக்கிறது என்றார்.

## உள்நாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துவரும் கூற்றுக்கள் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர், ஆளும்தரப்பு கடனை மீளச் செலுத்தும் செயற்பாடுகளை ஆரம்பித்தால் நாடு நெருக்கடிக்குள்ளாகும் என்ற கூற்று தவறானதாகும் என்றும் தெரிவித்தார்.

''நாடு தற்போதைய பாதையிலேயே தொடர்ந்தும்பயணிக்குமானால்நெருக்கடியை தவிர்த்துக் கொள்ளமுடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதுளை, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு அம்பர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, கொழும்பு, கம்பஹா, கேகாலை, குருநாகல், நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதிக ஆபத்துள்ள பகுதிகளில் இருந்து பொதுமக்கள் வெளியேறவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை கடைபிடிக்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மாணவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உழவு இயந்திரமொன்று வெள்ளத்தில் கவிழ்ந்து மூழ்கிய சம்பவத்தில் உழவு இயந்திர சாரதி, அவரது உதவியாளர் மற்றும் மத்ரஸா மாணவர்கள் 8 பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இந்த உழவு இயந்திரத்தில் 11 மாணவர்கள், சாரதி, உதவியாளர் அடங்கலாக 13 பேர் பயணம் செய்திருந்தனர்.

அவர்களில் ஆறு மாணவர்கள் உட்பட 8 பேர் உயிரிழந்திருந்தனர். உயிரிழந்தோரின் உடல்களில் எட்டாவது உடல் நேற்றுக்காலை மீட்கப்பட்டது.

முழுநாட்டையும் சோகத்தில் ஆழ்த்திய இச்சம்பவம்தொடர்பாகநிந்தவூர்காசிபுல்உலூம் அரபுக் கல்லூரி நிர்வாகம் ஊடகங்களுக்கான விவரங்களைத் தெரிவித்துள்ளதாவது:

எங்களுடைய மத்ரசா நிர்வாகத்தினரும், அதிபர் உட்பட அனைவரும் தீர்மானித்ததற்கு அமைய, இடர் ஒன்று ஏற்படுகின்ற பட்சத்தில் மாணவர்கள் பாதுகாப்பாக இருக்கக் கூடிய போதிய வசதிகள் எமது மத்ரசாவில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனால் மாணவர்களைஅங்குதொடர்ந்துவைத்திருந்து

தொடர்ச்சி 8ம் பக்கம்....



# ஆளும்தரப்பின் இலஞ்சம் மற்றும் ஊழலற்ற வேலைத்திட்டத்துக்கு ஆஸி. அரசு பாராட்டு





புதிய அரசாங்கத்தின் இலஞ்சம் மற்றும் ஊழலற்ற வேலைத்திட்டம் முதலீட்டாளர்களை ஈர்த்துள்ளதாக இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீவன் தெரிவித்தார்.



இலஞ்சம் மற்றும் ஊழலற்ற பொறிமுறையை நாடு முழுவதிலும் ஸ்தாபிக்க அரசாங்கம் கொண்டுச் செல்லும் வேலைத் திட்டத்திற்கு எந்த நேரத்திலும் ஆதரவளிக்க தயாரெனவும் ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் இதன்போது தெரிவித்தார்.

இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீவன் புதன் கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியபோதே இதனைத் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியா மற்றும் இலங்கைக்கு இடையில் காணப்படும் 75 வருட உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொண்டு இரு நாடுகளுக்கு இடையிலான நெருக்கமான தொடர்புகளை மேலும் பலப்படுத்தி முன்னோக்கி கொண்டுச் செல்ல எதிர்பார்ப்பதாகவும் உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு, கடல்சார் அலுவல்கள், டிஜிற்றல் மயமாக்கம், அரச துறை நவீனமயப்படுத்தல், தொழில் கல்வி, வலுசக்தி உள்ளிட்ட துறைகளில் ஆஸ்திரேலியாவின் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் (கிளீன் ஸ்ரீலங்கா) வேலைத்திட்டத்தைபாராட்டிய ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர், அதற்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் உறுதியளித்தார்.

இலங்கைக்கான ஆஸ்திரேலியாவின் பிரதி உயர்ஸ்தானிகள் லலிதா கபூர், ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ரொஷான் கமகே உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்துகொண்டனர்.







# மயிலிட்டியில் இடம்பெயர்ந்தோருக்கு உரும்பிராய் லயன்ஸ் கழகம் உதவி

உரும்பிராய் வயன்ஸ் கழகத் தலைவர் லயன் ம.மயூரதன் மற்றும் அவரது குழுவினரால் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட மக்களிற்கு நிவாரண உதவிகள் வழங்கிய வண்ணம் உள்ளனர்.

அந்தவகையில் மயிலிட்டி பகுதியில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களிற்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

# நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு செல்வம் எம்.பி. உதவி



மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக இதுவரை 14 ஆயிரத்து 237 குடும்பங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 560 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் 2100 பேர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 25 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களையும் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களையும் அதிகாரிகள் பார்வையிட்டு உதவிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய உதவிகளை முன்னெடுத்துவருகின்றார். அவருடன் ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளர் டானியல் வசந்தனும் சென்று அவசர உதவிகளை முன்னெடுத்து வருகிறார்.

சமைத்த உணவு, உலர் உணவு பொருள்கள், குழந்தைகளுக்கான பால்மா மற்றும் நுளம்பு வலைகளை வழங்கி வருகிறார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவிக்கையில் -

அனர்த்தத்தால் ஏற்படும் பாதிப்புக்கள் அதிகரித்து வருகின்றமையால் அரசாங்கத்தின் உதவிகள் உரிய முறையில் பாதிக்கப்பட்ட மக்களை சென்றடையாத நிலை காணப்படுகிறது.



தொடர்ச்சியாக மன்னார் மாவட்டத்தில் பாதிப்புகள் மற்றும் மக்களின் இடப்பெயர்வுகள் அதிகரித்து காணப்படுகிறமையாலும் மன்னார் மாவட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இடர்க்கால நிலையைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசாங்கம் இந்த விடயத்தில் அசமந்தப் போக்குடன் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

மன்னாரைபோன்றுவவுனியா மற்றும் முல்லைத்தீவிலும் பாதிப்புகள் அதிகரித்துள்ளன.

எனவே, வன்னி மாவட்டத்தில் மக்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டமையால் ஜனாதிபதி துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரித கதியில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மை உறைக்குமா?

கடந்த சில நாட்களாக கடலில் மையம் கொண்டிருந்து, எப்போது வேண்டுமானாலும் அருகில் வந்து பேரிடரை ஏற்படுத்துவேன் என்று அச்சுறுத்திக்கொண்டிருந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை, மண்டலம் அல்லது புயல் மெல்ல விலகிச் சென்றுவிட்டது. அது ஏற்படுத்துமோ என்று அச்சப்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்தாமலேயே அது விலகிச் சென்றுவிட்டது.

இந்தத் தாழ்வு நிலையால் ஏற்பட்ட வெள்ளம் 13 உயிர்களை இழப்பதற்குக் காரணமாகிவிட்டது. அதில் 6 பேர் சிறுவர்கள், மாணவர்கள் என்பதும் பரிதாபத்திற்குரியது. 3 லட்சத்து 77 ஆயிரம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இருந்தாலும் இலங்கையின் அருகே நிலை கொண்டிருந்த அந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் புயலாக மாறி இருந்தால் அது இன்னும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கும் என்பது தெளிவு.

கிழக்கு கரையில் இருந்து கிட்டத்ததட்ட 100 கிலோ மீற்றர்கள் தொலைவில் நின்றதற்கே அங்கு பல இடங்களிலும் வெள்ளம் ஊர்களை மூழ்கடித்துவிட்டது. வீதிகள் ஊடாக முழுமையாகப் படகுச் சவாரி செய்ய முடியுமளவிற்கு, வெனிஸ் நகரங்களாக அவை மாறி இருந்தன. புயல் இன்னும் நெருங்கி வந்திருந்தாலோ அது இலங்கையில் கரையைக் கடந்திருந்தாலோ நிலமை என்னவாகியிருக்கும் என்பதை கற்பனை செய்வதே பயங்கரமாக இருக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் கிழக்கு அளவிற்கு வெள்ளம் இல்லை என்றாலும் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி இருந்தன. ஆனால், ஏற்கனவே இரண்டு நாள்கள் பெய்த 300 மி.மீ. மழையினால் யாழ்ப்பாணத்து தரை அமைப்பு உள்ளீர்த்துக்கொள்ளக்கூடிய நீரின் அளவு நிறைந்துவிட்டது என்றும் அதற்கு மேல் மழை பெய்தால் அது வெள்ளமாக மட்டுமே தேங்கும் என்றும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன.

இதுமற்றொரு உண்மையை உணர்த்திவிட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் குளங்களையும் தொண்டைமானாறு போன்ற நீர் ஏரிகளையும் ஆழப்படுத்திப் பராமரிப்பதன் மூலம் குடாநாட்டின் நிலத்தடி நீரை அதிகப்படுத்தி அதன் மூலம் குடாநாட்டின் குடிதண்ணீர் தேவை உள்ளிட்ட தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்பது வெறும் கற்பனை வாதம் என்பதே அந்த உண்மை.

எவ்வளவு மழை கிடைத்தாலும் குடாநாட்டில் குறிப்பிட்ட அளவிற்கு மேல் நிலத்தடி நிரைச் சேமிக்க முடியாது என்பதே யதார்த்தம். இதனை நீர்வளம் சார்ந்த பல்வேறு வல்லுநர்களும் கூறிவந்திருக்கிறார்கள். அதனாலேயே அவர்கள் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிதண்ணீர் கொண்டுவரப்படுவது அவசியம் என்கிறார்கள். ஆனால், அதனை மறுப்பவர்கள் எப்போதும் குடாநாட்டின் நிலத்தடி நீர் வளத்தை அதிகரிப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்கிறார்கள்.

இந்தப் புயல் மீண்டும் ஒருமுறை அது சாத்தியமல்ல யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு வெளி மாவட்டங்களில் இருந்து சாத்தியமான வழிகள் மூலம்தான் தண்ணீர் எடுத்துவரப்படவேண்டும் என்பதை நிரூபித்துச் சென்றிருக்கின்றது. இனியாவது தண்ணீர் அரசியல் செய்பவர்கள் இது விடயத்தில் கவனம் எடுத்து யாழ்ப்பாணத்திற்கான குடிதண்ணீர்த் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு ஒத்துழைப்பார்களா?

# தொற்றா நோய் விழிப்புணர்வு

தொற்றா நோய்களை முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் அவற்றுக்கு முன்கூட்டியே தயாராக இருத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்றை பிரதமர் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்தது.

'ஆரோக்கியமான தேசத்திற்கு ஆரோக்கியமான தொழிற்படை' என்ற கருப்பொருளின் கீழ். தொற்றா நோய்களை முன்கூட்டியே கண்டறிவதற்கான சுகாதார நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் பங்குபற்றுதலுடன் நேற்று அலரிமாளிகை பிரதான மண்டபத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

சிறுநீரக இரத்த பரிசோதனை, இரத்த சர்க்கரை பரிசோதனை, கொலஸ்ட்ரோல் பரிசோதனை, பல் பரிசோதனை, கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை என பல மேற்கத்திய மற்றும் சுதேச மருத்துவ பரிசோதனைகளை செய்துகொள்ளும் வாய்ப்புகள் இங்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, மேலதிக செயலாளர்களான ஹர்ஷ விஜேவர்தன, மஹிந்த குணரத்ன உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

# விடுதலைப் புலிகளின் நினைவேந்தல் முன்னோக்கிப் பயணிக்க உதவாது

## முன்னாள் அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

இரக்கமற்ற வகையில் பயங்கரவாதத்தைக் கட்டமைத்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையோ அல்லது அதன் தலைவரையோ போற்றுவது நாம் முன்நோக்கிப் பயணிப்பதற்கு ஏதுவான வழிமுறையாக அமையாது எனச் சுட்டிக்காட்டியிருக்கும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இனவாதத்தைப் பரப்புவதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தெற்கின் கடும்போக்கு சக்திகளுக்கு அந்த வாய்ப்பை வழங்குவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என வலியுறுத்தியிருக்கிறார்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு புதன்கிழமை (27) கடும் மழைக்கு மத்தியிலும் வட, கிழக்கு மக்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச்சென்று பெரும் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களை நினைவுகூர்ந்தனர்.

இந்நிலையில், நினைவுகூரல் தொடர்பில் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் அலி சப்ரி, மேலும் கூறியிருப்பதாவது,

நாமனைவரும் ஒற்றுமையானதும், அமைதியானதுமான இலங்கையைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்திப்பணியாற்றும்போது, பலவருடங்களாக நீடித்த மிகமோசமான போரில் உயிரிழந்தவர்கள் மற்றும் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் சார்ந்த நினைவுகளுக்கு மதிப்பளிக்கவேண்டியது மிக முக்கியமானதாகும்.

அதற்கமைய கடந்தகால கருத்தியலின் விளைவாக சிலரது பாதை திசைமாறியிருந்தாலும், அவர்கள் உட்பட சகல அன்புக்குரியவர்களையும் நினைவுகூருவதற்கு குடும்பங்களுக்கு இடமளிக்கப்படவேண்டும். இதுவோர் மனித உரிமை என்பதுடன், கடந்தகாலக் காயங்களை ஆற்றுவதற்குரிய மிகமுக்கிய நகர்வாகும்.

இருப்பினும் இரக்கமற்ற வகையில் பயங்கரவாதத்தைக் கட்டமைத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையோ அல்லது அதன் தலைவரையோ போற்றுவது நாம் முன்நோக்கிப் பயணிப்பதற்கு ஏதுவான வழிமுறையாக அமையாது. மாறாக அத்தகைய நடவடிக்கைகள் கடந்தகால வலிகளையும், தேவையற்ற பதற்றங்களையும் தோற்றுவிப்பதுடன், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை நலிவடையச் செய்யக்கூடிய அச்சுறுத்தலைக் கொண்டிருக்கின்றன.

வன்முறையைக் கொண்டாடுவதன் மூலம் அதன் காயங்களிலிருந்து மீளமுடியாது. மாறாக புரிந்துணர்வு, சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் ஊடாகவே அதனை அடைந்துகொள்ளமுடியும்.

அதேபோன்று தெற்கில் உள்ள கடும்போக்கு சக்திகள் இனவாதத்தைப் பரப்புவதற்கு ஏதுவான எந்தவொரு சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். அவர்களுக்கு அத்தகைய வாய்ப்பை வழங்குவதைத் தவிர்ப்போம்.

அதேவேளை, பல்லினத்தன்மை என்பது பிரிவினைக்கு வழிவகுப்பதாகவன்றி, எமது பலமாகத் திகழக்கூடிய 'இலங்கையர்' என்ற அடையாளத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி நாமனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம் என அழைப்புவிடுத்துள்ளார்.

# படைகளின் பிடியிலுள்ள காணிகளை விடுவிப்போம்

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிப்போம் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார்வைஸ் மார்ஷல் சம்பந் துய கொத்தாவ யாழ்ப்பாணத்தில் உறுதியளித்தார்.

ஜனாதிபதியின் பணிப்புக்கமைய வெள்ள அனர்த்த நிலைமை தொடர்பில் நேரில் பார்வையிட நேற்று யாழ்ப்பாணம் வந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம், படைகளின் பிடியிலுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படுமா? என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

"காணி விடுவிப்பு தொடர்பில் நாம் சிந்தித்து வருகின்றோம். அது தொடர்பில் நாம் மதிப்பீடு செய்துள்ளோம். பாதுகாப்பு மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் நாம் சில முடிவுகளை எடுத்துள்ளோம். நிச்சயமாக இந்த விடயத்தில் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுவோம்.

நாம் ஏற்கனவே சில வீதிகளை விடுவித்துள்ளோம். காணிகளையும் விடுவிப்போம். இந்த நாட்டு மக்களின் நலன் குறித்து நாம் எப்போதும் கரிசனையுடையவர்களாகவே உள்ளோம்" - என்றார் அவர்.

# வானிலை முன்னறிவிப்பு

*வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுவடையக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.*

*இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 6 - 12 மணி நேரத்தில் கடலோரப் பகுதியிலிருந்து இந்தியாவிற்குள் நகரும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.*

*இதன் காரணமாக நாடளாவிய ரீதியில் பல பிரதேசங்களில் மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.*

*வட மாகாணம் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் 150 மில்லிமீற்றர் வரை மழை பெய்யலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.*

### மாட்டுப்பள்ளையில்

# உடைந்து கீழிறங்கிய பாலத்தை புனரமைப்பதற்கு முயற்சிப்பேன்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா உறுதி

(அஷ்ரப்கான்)

மாட்டுப்பள்ளை பிரதேசத்தில் உடைந்து கீழே இறங்கி இருந்த பாலத்தை இந்த ஊர் பிரதேச செயலாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரிகள் திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் நானும் இணைந்து தற்காலிகமாக செப்பனிட்டு போக்குவரத்திற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

இப்போக்குவரத்து பாலத்தை நிரந்தரமாக மீள அமைப்பதற்கான முயற்சிகளை அரசாங்கத்துடன் பேசி நான் மேற்கொள்வேன் என திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா தெரிவித்தார்.

இது விடயமாக அவர் மேலும் குறிப்பிடும் போது -

மாட்டுப்பள்ளை பிரதேசத்தில் வடக்கையும் தெற்கையும் இணைக்கின்ற ஒரு பாலம், ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் முற்றாக உடைந்து கீழிறங்கியிருந்தது. இதனால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

இப்பாலத்தை தற்காலிகமாக போக்குவரத்துக்காக பயன்படுத்தக்கூடியவாறு செப்பனிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியாகி இருக்கின்றன.



திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் அரசாங்கத்தோடு பேசி அதனை நிரந்தரமாக புனரமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வேன்.

ஏற்பட்ட வெள்ளத்தால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாயிகளின் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களின் உற்பத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது. இவை அனைத்தையும் நான் அரசாங்கத்தோடு பேசிய அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க முயற்சிப்பேன் என்றும் தெரிவித்தார்.

# புத்தளம் மாவட்டத்தின் சாகித்திய கலை விழா

(சியாஜ்)

புத்தளம் மாவட்ட சாகித்திய கலை விழா இன்று (வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணிக்கு ஆனமடுவ சுதம்பாய மண்டபத்தில் நிர்வாகம் மற்றும் மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் சந்தன அபேரத்ன மற்றும் வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ வர்ணசூரிய ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெற உள்ளது.

இச் சாகித்திய விழாவில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள தமிழ் மற்றும் சிங்கள மொழியில் நீண்ட நாள்களாக சேவையாற்றி வரும் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் மற்றும் கலைத்துறையில் சாதனை யாளர்கள் ஆகியோர் கலா தினி விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஓட்டோ - கெப் மோதி விபத்து நால்வர் காயம்


குருணாகல் - கெப்பெட்டிகல வீதியில் மீகஸ்தென்ன பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

ஓட்டோ ஒன்று வீதியின் வலது பக்கமாக திரும்ப முயன்ற போது பின்புறத்தில் பயணித்த கெப் வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது ஓட்டோவில் பயணித்த நால்வர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# மயிரிழையில் உயிர் தப்பிய முள்ளியவளைக் குடும்பம்



முள்ளியவளை பகுதியில் மரம் முறிந்து வீட்டுக் கூரையின் மீது விழுந்ததால் வீட்டின் மேற்பக்கக் கூரை முற்றாக சேதமடைந்த சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்துவரும் நிலையில், கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை 1 ஆம் வட்டாரம் கிராமத்தில் உள்ள வீடொன்றில் புதன்கிழமை அதிகாலை வீட்டின் அருகில் இருந்த பெரிய புளிய மரம் முறித்து விழுந்துள்ளது.

அதனையடுத்து வீட்டின் மேற்பக்கக் கூரை முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளது.

குறித்த சம்பவத்தின்போது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்.



# 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து கார் விபத்து ஒரே குடும்பத்தவர்கள் நால்வர் காயம்



கெப்பெட்டிபொல - பொரலந்த பிரதான வீதியில்

போகஹகும்புர பிரதேசத்தில் கார் ஒன்று 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயமடைந்துள்ளனர் என போகஹகும்புர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது காரில் பயணித்த தாய், தந்தை மற்றும் இரண்டு பிள்ளைகள் காயமடைந்துள்ள நிலையில் போகஹகும்புர பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை போகஹகும்புர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு இடர் நிவாரணம் வழங்க வேண்டும்

## குரல் கொடுக்கிறது அரச பொது ஊழியர் சங்கம்

(அஷ்ரப்கான்)

நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாக அழிவுகளை எதிர்கொண்டுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

இவரின் காரைதீவு இல்லத்தில் வைத்து நேற்று (வியாழக்கிழமை) ஊடகவியலாளர்களை சந்தித்து பேசியபோது இது தொடர்பாக இவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மக்களுக்கும் அரசாங்கத்தின் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக அரசாங்க ஊழியர்களை புறம் தள்ளவே கூடாது.

அரசாங்க ஊழியர்களுக்கு அனர்த்த கால நிவாரணம் வழங்குவதில்லை என்று கடந்த காலத்தில் அரசாங்க சுற்று நிருபம் வெளியிடப்பட்டது.

இதனால் தொடர்ந்தேச்சையாக அனர்த்த கால நிவாரணம் அரசாங்க ஊழியர்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால் ஆழி பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் கிடைப்பதை எமது தொழிற்சங்கம் உறுதி செய்தது.

எனவே தற்போதைய அனர்த்த நிலைமையை கருத்தில் கொண்டு அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோருகின்றோம். அந்த சுற்று நிருபம் பொருத்தம் அற்றது என்பது எமது நிலைப்பாடாகும்.

மேலும் ஓய்வூதியர்களுக்கும் அரசாங்கம் அனர்த்த கால நிவாரணம் வழங்க வேண்டும். அதே நேரம் அடுத்த மாதத்துக்கான அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவை முன்கூட்டியே அரசாங்கம் வழங்கி வைப்பது பேருதவியாக அமையும்.

முழுமையாகவோ, பகுதியளவிலோ வீடுகள் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு வீடுகளை சரி செய்வதற்கு வட்டி இல்லா வங்கி கடன்கள் கிடைக்க அரசாங்கம் வழி செய்ய வேண்டும் என்றும் கோருகின்றோம்.

தற்போதைய அனர்த்த நிலைமையின்போது கை விரல் அடையாள பதிவு நடவடிக்கைகள் அரசாங்க அலுவலகங்களில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவது அரசாங்க ஊழியர்களுக்கு சற்று ஆறுதலை தரும். - என்றார்.

# இலங்கை சீன சட்டவாக்க நிறுவனங்களின் உறவுகளை மேலும் வலுப்படுத்தவேண்டும்

## சீனத் தூதுவர் சபாநாயகரிடம் வலியுறுத்தல்



இலங்கை - சீன சட்டவாக்க நிறுவனங்களின் உறவுகளை மேலும் வலுப்படுத்துவதுடன் புதிய நாடாளுமன்றத்திலும் இலங்கை - சீன நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தை ஸ்தாபிக்க எதிர்பார்ப்பதாக சீனத் தூதுவர் சபாநாயகர் அசோக ரன்வலவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங்கிற்கும், சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வலவுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

சீன தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுவின் தலைவர் (சீன நாடாளுமன்ற சபாநாயகர்) ஸாவோ லெஜியின் வாழ்த்துக்களை சீன தூதுவர் சபாநாயகரிடம் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்ட காலஒத்துழைப்புக்களை நினைவு கூர்ந்த புதிய சபாநாயகர், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் தலைமையிலான புதிய அரசாங்கத்திலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த சீனத் தூதுவர், இரு நாடுகளின் சட்டவாக்க நிறுவங்களின் உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் எனவும், புதிய நாடாளுமன்றத்திலும் இலங்கை - சீன நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தை ஸ்தாபிக்க எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

அத்துடன், பொருளாதார அபிவிருத்தி, கலப்பின விதை வகைகளை விருத்தி செய்தல் உள்ளிட்ட விவசாயம் சம்பந்தப்பட்ட விடயங்கள் நீர் முகாமைத்துவம், மசகு எண்ணெய் சுத்திகரிப்பு, வெளிநாட்டு முதலீடு மற்றும் ஏற்றுமதி துறையில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்துவது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

# எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சமூக ஆரோக்கியம் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வித்தியா குமாரிபேல் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் கடந்த 2023 ஆண்டில் 694 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 15 சதவீதமானோர் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

இளைஞர்கள் மற்றும் யுவதிகள் எயிட்ஸ் நோயால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கையில், எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் கையடக்கத் தொலைபேசி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி மூலம் உருவாகும் புதிய உறவு முறைகள் அதிகம் தாக்கம் செலுத்தியுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணம் ஏ-9 வீதி வழமைக்கு திரும்பியது

சீரற்ற வானிலை காரணமாகப் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டிருந்த யாழ்ப்பாணம் ஏ-9 வீதி தற்போது மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

ஓமந்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நொச்சிமோட்டை மற்றும் ஓமந்தை நகரம் ஆகிய பகுதிகளில் ஏ9 பிரதான வீதியின் ஊடாக அதிகளவில் வெள்ள நீர் வழிந்தோடியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தற்போது வெள்ள நீர் குறைவடைந்துள்ளதால் யாழ்ப்பாணம் ஏ9 வீதி மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# வெள்ளம் பாதித்தோருக்கு யாழ். சிற்றி லயன்ஸ் உதவி





யாழ்.மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேசிய மக்கள் சக்தியின் யாழ். - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்லயன்ஜெ.ரஜீவனின்கோரிக்கைக்கு அமைவாக அவரது கழகமாகிய யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தால் உலருணவு மற்றும் இரவு நேர உணவு என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் பெருமளவான உறுப்பினர்கள் உற்சாகத்துடவ் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடிகானில் தவறி விழுந்து ஒருவர் பரிதாபச் சாவு

மாவத்தகம, கொஸ்வத்தை பகுதியில் வனிகானில் விழுந்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் உள்ள கைத்தொழில் வலயத்தில் நீர் நிரம்பிய வடிகானில் தவறி விழுந்த நிலையிலேயே குறித்த நபர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உடபுஸ்ஸல்லாவ, மடுமுல்ல பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கொஸ்வத்த பொலிஸார் சடலத்தை மீட்டு விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

# வெள்ளத்தால் சேதமான பாலங்களை நேரில் ஆராய்ந்தார் கிழக்கு ஆளுநர்





திருகோணமலை மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மூதூர் கிழக்கு - கட்டைபறிச்சான் இறால் பாலம் மற்றும் மூதூர்- அரபாநகர் பாலம் ஆகியவற்றின் நிலைமைகளை கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர நேரில் சென்று ஆராய்ந்தார்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்திரா மற்றும் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன ஆகியோர் புதன்கிழமை மாலை குறித்த இடங்களுக்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இதன் போது பிரதேச மக்களிடம் கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டனர்.

# மஹரகமவில் கையடக்க தொலைபேசிகள் திருட்டு

## சந்தேகநபர் போதைப்பொருளுடன் கைது

மஹரகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில்நான்குகையடக்கத்தொலைபேசிகள் திருடப்பட்ட சம்பவத்துடன்தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என நுகேகொடை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

நுகேகொடை பொலிஸ்குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் நாவல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நாவல பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 920 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் 05 கையடக்கத்தொலைபேசிகள்பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மஹரகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சட்டவிரோதமாக கொண்டுவந்த

# 14 லட்சம் ரூபாய் பெறுமதியான சிகரட்டுகளுடன் ஒருவர் கைது

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 14 லட்சம் ரூபாபெறுமதியானவெளிநாட்டு சிகரட்டுகளுடன் சந்தேக நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று (வியாழக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீர்கொழும்புதலுபொத்த பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் மலேசியாவிலிருந்து நேற்று அதிகாலை 12.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதியில் மிகவும் சூட்சுமமானமுறையில்மறைத்து வைக்கப்பட்டிருந்த 275 வெளிநாட்டு சிகரட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.





# விசுவமடுவில் வீட்டினுள் புகுந்தது சிறுத்தை

முல்லைத்தீவு, விசுவமடு இளங்கோபுரம் பகுதியில் சிறுத்தைஒன்றுவீடொற்றுக்குள் புகுந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விசுவமடு இளங்கோபுரம் கிராமத்தில் திடீரென சிறுத்தை ஒன்று வீட்டிற்குள் உள்நுழைந்துள்ளது.

இதனையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல்வழங்கப்பட்டதையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் குறித்த சிறுத்தையை மீட்டு கொண்டு சென்றுள்ளனர்.

தற்போது நிலவும் சீரற்ற வானிலையால் காடுகளுக்கு அருகில் வசிப்பவர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ராஜ்நாத் சிங்குடன் கனிமொழி சந்திப்பு; தமிழ்நாடு மீனவரை மீட்கக் கோரிக்கை



மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை சந்தித்த திமுக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி, தமிழக மீனவர்களை மீட்டுத் தரும்படி கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர்நடந்துவருகிறது. இந்நிலையில், மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை, திமுக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமாழி புதன்கிழமை சந்தித்து மனு அளித்தார்.

அந்த மனுவில், "கடலோர காவல்படையால் லட்சத்தீவுகள் அருகில் கைது செய்யபப்பட்ட தூத்துக்குடி தருவை குளத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள், அவர்களின் படகுகளை விடுவிக்க வேண்டும்.

குஜராத் போர்ப்பந்தர் அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, கடலில் தவறி விழுந்த தூத்துக்குடி, அயன் பொம்மையாபுரத்தைச் சேர்ந்த மீனவர் அண்ணாதுரையை தேடும் பணியை துரிதப்படுத்தி அவரை கண்டுபிடித்து தரவேண்டும்" என தெரிவித்துள்ளார்.

## மாணவர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பராமரிப்பது என முடிவு செய்திருந்தோம். ஆனால் அதன் பிறகு ஏற்பட்ட பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக எமது காஸிபுல் உலூம் அரபுக் கல்லூரியின் மாணவர் விடுதி, வகுப்பறைகள், தொழுகை அறைகள் என்பன மழைநீரினால் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தன. இந்நிலைமை காரணமாக இரு மாணவர்கள் அங்கு விபத்தைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. மலசலகூட குழிகள் கூட நிரம்பிக் காணப்பட்டன.

இதனால் அடிப்படை வசதிகளைக்கூட மாணவர்களுக்கு வழங்க முடியாத நிலைமை எமக்கு ஏற்பட்டது. அதனால் மீண்டும் எங்களுடைய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் கூடி முடிவுகளை எடுத்தோம். மாணவர்களைப் பாதுகாக்கும் வகையில் கல்லூரிக்கு விடுமுறை வழங்கி, மாணவர்களை அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற முடிவினை எடுத்தோம்.

இதற்காக பிரத்தியேகமாக ஒரு பஸ்வண்டியினை வாடகைக்கு அமர்த்தி மாணவர்களைக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தோம். ஆனால் சம்மாந்துறைக்கு மாணவர்களை ஏற்றிக் கொண்டு சென்றபோது, காரைதீவில் இருந்த பாதுகாப்புப் படையினர், பஸ்வண்டி அப்பாதையூடாகச் செல்ல முடியாதுள்ளதாகவும், உழவு இயந்திரத்தின் ஊடாகவே மக்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதாகவும் கூறினர்.

அதனையடுத்து மாணவர்களை உழவு இயந்திரத்தில் அனுப்புவதற்கு நாங்கள் சம்மதித்தோம். இதனை மாணவர்களுடைய பெற்றோருக்கும் அறிவித்தோம்.

தாங்கள் மறுமுனையில் நிற்பதாகவும், மாணவர்களை அனுப்புமாறும் பெற்றோர் கூறியதன் பின்னரே நாங்கள் மாணவர்களை உழவு இயந்திரத்தில் அனுப்பிவைத்தோம். ஆனால் அந்த உழவு இயந்திரம் கவிழ்ந்து இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இதுவே உண்மை நிலைமையாகும்” என்ற நிந்தவூர் காசிபுல் உலூம் அரபுக் கல்லூரி நிர்வாகத்தினர் மேலும் குறிப்பிட்டனர்.

## வெள்ள ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலையால் ஏற்பட்ட அனர்த்தத்தில் 17 பேர் காயமடைந்துள்ளதுடன் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

இந்த அனர்த்தத்தில் 91 வீடுகள் முழுமையாகவும் 1662 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

நாடளாவிய ரீதியில் 311 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், அந்த முகாம்களில் 10 ஆயிரத்து 431 குடும்பங்களைச் சேர்ந்த 32 ஆயிரத்து 695 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக, 13,117 குடும்பங்களைச் சேர்ந்த 44,346 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

03 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 131 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. மேலும் 68 பாதுகாப்பு நிலையங்களில் 1,700 குடும்பங்களைச் சேர்ந்த 6,031 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# வெள்ளப் பாதிப்பால் அவசரமாகக் கூடியது வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம், நேற்று (வியாழக்கிழமை) காலை, வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்ஹ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற

உறுப்பினர்கள், அரசாங்க அதிபர் சரத்சந்திர உட்பட பிரதேச செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், பாதுகாப்பு துறை அதிகாரிககள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சீரற்ற காலநிலையால் வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் ஆராய்வதற்காக, விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில், வெள்ளப் பாதிப்புக்கள் தொடர்பாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.





இதன்போது, கருத்துத் தெரிவித்த மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத், தொழிலுக்குச் செல்ல முடியாமல் இருப்பவர்கள் மற்றும் வெளியேற முடியாமல் குடியிருப்புக்களுக்குள் தங்கியிருப்பவர்களுக்கு சரியான முறையில் உணவுகள் வழங்கப்படுவதில்லை என்பதை சுட்டிக்காட்டியதோடு, அவர்களை அடையாளங்கண்டு, தேவையான அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்களை, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன், தொடர்ச்சியாக ஒருவார காலத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

மேலும், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான அவசர உதவிகளை துரித கதியில் முன்னெடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன், வெள்ளப் பாதிப்பால் இம்முறை உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமையால், அவர்கள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்துமாறும் வேண்டுகோள் விடுத்தார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.11.2024இல் வெளியிடப்பெற்றது